# சித்தர்கள் வரலாறும், இந்து மறுமலர்ச்சி இயக்கமும்

பதினெண்சித்தர்கள் வழங்கிய அருளார்ந்த அறிவுக்கொடையே சித்தர் நெறி. அது காலப்போக்கில் பல்வேறு சேர்க்கைகளையும் பெற்று இன்றைய இந்து மதமாக விளங்குகிறது. எனவே, சித்தர் நெறியை அறிமுகம் செய்வது, பதினெண்சித்தர்களையே அறிமுகம் செய்வதாகும். பதினெண்சித்தர்களை அறிமுகம் செய்வது இன்றைய நிலையில் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை அறிமுகம் செய்வதாகும்.

இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்ற ஒன்று கி.பி. 1772-ல் இருந்து இரண்டு நூற்றாண்டு கால அளவுக்கு மேல் செயல்பட்டும் அதனுடைய கொள்கைகளும், குறிக்கோள்களும் எதிர்பார்த்த அளவு வெற்றி பெறவில்லையென்பதால், அதனை வரலாற்றுப் பின்னணியோடு, கலை, இலக்கியத் துணையோடு, நடைமுறைப்படுத்தும் முயற்சியின் ஓர் அங்கமே இக்கட்டுரை. இந்த மண்ணுலகம் தோன்றி 500 கோடி ஆண்டுகளாகின்றன என்று முறையான வரலாற்றை எழுதித் தரும் பதினெண்சித்தர்கள், இம்மண்ணுலகம் தோன்றுவதற்கு முன்பே விண்வெளியில் உள்ள அண்டங்களிலே தோன்றியவர்களாவார்கள். இவர்களின் பெருமுயற்சியால்தான், இம்மண்ணுலகில் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு முதலிய பல வாழ்வுகள் முளைத்துக், கிளைத்துச், செழித்து வளர்ந்திருக்கின்றன. இன்றைக்கு மேற்கூறிய வாழ்வுகளெல்லாம், சிதைந்து சீரழிந்து கிடக்கின்றன. இவற்றைச் செப்பனிடுவதற்காகவே மீண்டும் பதினெண் சித்தர்களின் அருளார்ந்த அறிவுக் கொடையை அறிமுகப்படுத்துகிறோம்.

பதினெண் சித்தர்கள் [1] பற்றிய வரலாற்று நூல்கள் பல தொகுதிகளாக எழுதப்பட்டிருக்கின்றன என்பதால் விரிவஞ்சி சுருக்கமான விளக்கம் மட்டும் இங்கு தரப்படுகிறது. இம் மண்ணுலகில் பிறந்த உயிரினங்களில் தலைமையான உயிரினமே மனித இனம். இந்த மனீசர்[2] களோடு பதினெண் சித்தர்கள் உறவு கொண்டு உருவாக்கிய விந்துவழி வாரிசுகள் நவகோடி சித்தர்கள், நவநாத சித்தர்கள், ஞான சித்தர்கள், தவசித்தர்கள், ஓம சித்தர்கள், ஓக சித்தர்கள், யாக சித்தர்கள், யக்ஞ சித்தர்கள் ....... என்று 48 வகைப்படுகிறார்கள். இவர்களல்லாமல் பல வகைப்பட்ட குருவழிச் சித்தர்களும் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களின் அடிப்படையில் 64 ஆயகலைகள், 48 அருட்கலைகள், 9 கடவுட்கலைகள், 9 தெய்வீகக்கலைகள், 9 நோய்க்கலைகள், 9 பேய்க்கலைகள் 9 தேய்கலைகள் என்று எண்ணற்ற கலைகளும், பலவகைப்பட்ட சாத்திறங்களும், தோத்திறங்களும், மந்திறங்களும், வழிபாட்டு முறைகளும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் செயலகங்களாக ஆதியில் 108 திருப்பதிகள், 243 சத்தி பீடங்கள், 1008 சிவாலயங்கள் படைக்கப்பட்டன. கால வேகத்தாலும், கருத்து வளர்ச்சியாலும், தேவையாலும் 48 வகைப்பட்ட வழிபாட்டு நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

இவை காலந்தோறும் தோன்றிய அருளாளர்களால் 100-க்கும் மேற்பட்ட வகைகளாக வளர்ந்துவிட்டன. அருளாளர்களும் காலங்கள்தோறும் தங்கள் தங்களுடைய பத்திநிலைகள், சத்திநிலைகள், சித்திநிலைகள், முத்திநிலைகள் முதலியவைகளுக்கேற்பத், தங்களுடைய அனுபவங்களைப்

---

1. சித்தர்கள் = சித்துக்களை அத்தவர்கள் = சித்துக்களை வென்று முடித்தவர்கள்.
2. ஈசன் = தலைவன்
   மண்ணின் தலைவன் = மணீசன் [மண் + ஈசன்]



பத்தி இலக்கியங்களாகப் [3] படைத்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம், இந்தியத் துணைக்கண்டத்திற்குள் இருக்கின்ற இந்து மதத்தில் தான் இடையீடு இல்லாத முறையான, தொடர்ந்த வளர்ச்சி நிலைகளில் காண முடிகின்றது. எனவே தான், உலக மதங்கள் அனைத்தையும் இந்துமதத்தின் அடிப்படையில் விளங்கிக் கொள்ள முடிகிறது. அதாவது பதினெண்சித்தர்கள் உருவாக்கிய தத்துவங்களும், வழிபாட்டு முறைகளும், வழிபாட்டு நிலையங்களும்தான் உலக மதங்களனைத்தையும் அந்தந்த நாட்டுச் சூழல்களுக்கும், தேவைகளுக்கும் ஏற்பத் தோற்றுவித்திருக்கின்றன என்பதே உண்மையாகும். எனவே, சித்தர்நெறி அறிமுகத்தின் மூலம் உலக மதங்களின் இணைப்பும், உலக ஆன்ம நேய ஒருமைப்பாடும். உலக சமத்துவச் சகோதரத்தத்துவப் பொதுவுடைமைக் கூட்டுறவுச் சமுதாயமும் உருவாக்கப்பட்டிடும். இதன் மூலம், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கையும், குறிக்கோளும் நிறைவேறிடும். அதாவது, உலகம் தழுவிய முறையில் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு முதலிய அனைத்திலும் ஒற்றுமை, சமாதானம், மகிழ்வு, நிறைவு. நிம்மதி, அமைதி, கனிவு, அன்பு, பற்று, பாசம், தோழமை, நட்பு, இனிமை மிகு நல்லுறவு முதலியவைகள் தழைத்தோங்கிடும். எனவே, சித்தர்நெறி அறிமுகம் வரலாற்றுப் பின்னணியில் சுருக்க விளக்கமாகஉருவாகிறது.

குமரிக்கண்டத்தில் பதினெண் சித்தர்கள் பஃறுளி ஆற்றங்கரையில் தாங்கள் உருவாக்கிய சமுதாயத்தத்துவத்தின்[4] முதிர்ச்சியான அரசியல் தத்துவத்தைச்[5]

---

3. Religious Literature.
4. Social Philosophy.
5. Political Philosophy.

செயலுக்குக் கொண்டு வந்து இம்மண்ணுலகின் முதலரசு[6] உருவாக்கினார்கள். இந்த அரசு, இம்மண்ணுலகிற்கே தொன்மையான அரசு அல்லது பழமையான அரசு என்ற பொருளில் 'பண்டைய அரசு' என்று குறிக்கப்பட்டது. இதுவே பாண்டிய அரசு ஆயிற்று.

பாண்டிய அரசின் அரியணையில் சித்தர் கருவூரார் அமர்ந்த காலத்தில் தமது மகளான சோழமாதேவிக்கு[7]க் குமரியாற்றங்கரையையும், அதன் சுற்றுவட்டார நாடுகளையும் பிரித்துச் சோழமாதேவியின் நாடு என்னும் பொருளில் 'சோழநாடு' ஒன்றை உருவாக்கினார். காலப்போக்கில் இவ்விரு பேரரசுகளையும் சேர்ந்த அரச குடும்பத்தவர்கள், சேரர்கள்[8] என்று உருவாக்கப்பட்டு, மலையும், மலை சார்ந்த இடங்களையும்[9] ஆளுவதற்குரியவர்களாக நியமிக்கப்பட்டார்கள். இது பற்றிய முழுவிபரங்களும் பதினெண்சித்தர்களுடைய 'அரச பாரம்பரியம்'[10] என்ற நூலில் உள்ளன. இதே போல் சமய வரலாறு 'குரு பாரம்பரியம்'[11] என்ற பெயரிலும்; இலக்கிய வரலாறு 'இலக்கிய பாரம்பரியம்'[12] என்ற பெயரிலும்

---

6. The first government on this earth is founded on the bank of the river 'PAHRULI' (பஃறுளி) by the Pathinen Siddhars, that is called 'The Pandian Kingdom (பண்டைய அரசு = பாண்டிய அரசு — The word 'Pandia' means ancient; that is coined as 'Pandians')

7, சோழியம்மன்

8. சித்தர்களால் உருவாக்கப்பட்ட அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காகத்தான் சேரர் என்ற பெயர்ச்சொல் உருவாக்கப்பட்டது.

9. The hills and the hilly places:

10. The Political History.

11. The Religious History.

12. The History of Literature.



உள்ளன. இப்படிப் பதினெண்சித்தர்கள் மிகச் சிறந்த வரலாற்றுப் பேராசிரியர்களாக விளங்குகிறார்கள்.

பதினெண்சித்தர்கள், இம்மண்ணுலகின் ஆயுளை 48 பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றி நிறைவு பெறுவதுடன் இணைத்துள்ளார்கள். முதலில் இராசிவட்டக் கருவூரார்கள் என்ற 12 பேர்களும், பிறகு முறையே விண்மீன் வட்டத்திற்கு 27 பேர்களும், கோள் வட்டத்திற்கு 9பேர்களும் தோன்றுவார்கள் என்று குறித்துள்ளார்கள். விரிவஞ்சி இதன் சுருக்கத்தை மட்டும் இங்கு தருகிறோம். இதுகாறும் தோன்றியவர்களில் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்களும், தஞ்சைப்பெரிய கோவிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

அமராவதியாற்றங்கரைக் கருவூரார் சமுதாயப் புரட்சியின்[13] மூலம், அனைத்தையும் சாதித்துவிட முடியும் என நம்பினார். இவரது காலத்தில் குமரிக் கண்டத்திலிருந்த பனி மூடிய தென் இமயமலையையும், தென் வேங்கட மலையையும் அடிப்படையாகக் கொண்ட சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கிய வரலாறுகள் முறையாகவும், முழுமையாகவும் எழுதப்பட்டன. உலகம் முழுவதும் வாணிகத் தொடர்பு வைத்திருந்த தமிழினத்தின் பல்வேறு வகையான சமுதாய வீழ்ச்சிகளையும், தாழ்ச்சிகளையும் சரிக்கட்டுவதற்காக சமுதாய மாற்றப்பணி நிறைவேற்றப்பட்டது. ஆனால் அது மூன்றாவது தமிழ்ச்சங்கத்தின் முடிவையே தந்தது. தமிழின விரோதிகளும், துரோகிகளும் தாக்கியதால் தமிழ்மொழி-இன-நாட்டு உணர்வுக்கோட்டையாக விளங்கிய மதுரை மாநகரம் எரிக்கப்பட்டது. தமிழ்ப் புலவர்கள்

---

13. Social Revolution.

வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். தமிழ் ஏட்டுக் குவியல்கள் அழித்தொழிக்கப்பட்டன. இம்மாபெரும் அழிவுக்குப் பிறகு தமிழினத்தின் நல்வாழ்வுக்காகத் தமிழ் இலக்கியங்கள் ''சங்ககால இலக்கியங்கள்'' என்ற பெயரில் தேடித் தொகுக்கப்பட்டன. இம்மாபெரும் பணியை நிகழ்த்திட்ட அமராவதியாற்றங்கரைக் கருவூரார் எண்ணற்ற நூல்களை எழுதினார், தக்காரைக் கொண்டு எண்ணற்ற நூல்களையும் எழுதுவித்தார். அவைதான் தமிழ்மொழி, தமிழ்நாடு, தமிழினம் எனும் முக்கோணக் கோட்டையைப் பழுதுபார்த்துச் செப்பனிட்டு நினைவுச்சின்னமாகப் பாதுகாத்துக் கொடுத்தன. இந்த நினைவுச் சின்னத்தில் உண்மையான தமிழின அரசு ஒன்று தோன்றி ஆட்சி செய்யச் செய்தவரே காவிரியாற்றங்கரைக் கருவூரார்.

பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் அரசியல் மாற்றத்தின் மூலமே[14] தமிழ்மொழி, இனம், நாடு என்ற முக்கோணக் கோட்டையில் அருளாட்சி அமைத்து உலகம் முழுதும் சித்தர் நெறியைத் தழைத்தோங்கச்செய்யமுடியுமென்று முடிவெடுத்தார். இந்த முடிவுக்காகப் பலமுறை உலகச் சுற்றுப்பயணம் செய்தார். கடலுள் மறைந்த குமரிக் கண்டத்திலிருந்த அனைத்து விதமான கலைகளையும், அறிவியல்களையும்[15] மீண்டும் மானுட இன நலனுக்காக சிறுபள்ளிகள், பெரும்பள்ளிகள், பன்னாட்டுப் பன்னாட்டுக்குப் பல்கலைக் கழகம் முதலியவை அமைத்து வளர்த்தார். தமிழ் மொழியின் மூலமும், தமிழினத்தின் மூலமுமே தான் விரும்பும் உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடைமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை அமைக்கவிரும்பினார். ஆனால் இவர் எந்த ஒரு மொழியும் மற்ற மொழிகளை அடக்கி

14. Political Change.
15. Arts and sciences.



ஆள்வது தவறு என்று கண்டிக்கிறார். எனவேதான் இவர் இம் மண்ணுலகில் உள்ள பெரும்பாலான மானுட இனங்கள் தமிழினத்தில் இருந்தே பிறந்தன என்றும்; இம் மண்ணுலகின் பல பகுதிகளில் இயற்கையாகத் தோன்றிய மானுட இனங்களும் தமிழினத்தின் கலப்பால் தெய்வீக நிலையைப் பெற்றுவிட்டன என்றும் குறிக்கின்றார். இதே போல் இம் மண்ணுலகில் தோன்றிய பெரும்பாலான மொழிகள் அனைத்தும் தமிழ் மொழியில் இருந்தே பிறந்தன என்றும்; இம் மண்ணுலகின் பல பகுதிகளில் பேச்சு வழக்கில் இருந்த மொழிகளை எல்லாம் செம்மைப்படுத்தித் தமிழ்மொழியின் அடிப்படையிலேயே எழுத்துக்களையும், இலக்கண இலக்கியங்களையும் வரச்செய்தார்கள் சித்தர்கள் என்றும் குறிக்கின்றார் இவர். இவற்றின் மூலம் மனித குல வாழ்வையே தமிழ் மொழிக்கும், தமிழ் இனத்திற்கும் உரியதாகவே ஆக்கிக்காட்டுகிறார் இவர். இவரது இக்கருத்து செயற்கை போல், கற்பனை போல், கனவு போல், புராணம் போல், இதிகாசம் போல் தோன்றுகின்றது என்பதை இவரே உணர்ந்திருக்கிறார். எனவேதான் இவர் உலக வரலாறு[16] மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும் எழுதியிருக்கிறார். இன்னும் சொல்லப்போனால், இவரை ஒரு 'வரலாற்றுப் பேராசிரியர்' அல்லது 'வரலாற்றுத் துறையின் தந்தை' என்றே கூறலாம். இவர் பல நூறாயிரம் ஆண்டுகள் மிகத்தெளிவாக முறைப்படிக் காலக் கணக்கீட்டு அடிப்படையில்[17] வரலாறு எழுதியிருப்பது மிகச் சிறப்பாகும். இவர் இந்த உலகில் முதன் முதலில் தோன்றிய நிலம் குமரிக்கண்டம்[18] என்பதைக் கூறி அதிலிருந்தே, சமய வரலாறு[19] ''குரு பாரம்பரியம்''; அரசியல் வரலாறு[20] ''அரச பாரம்பரியம்''; இலக்கிய

16. World History.
17. With a chronological approach.
18. The Lost Lemoria.
19. Religious History.
20. Political History.

வரலாறு[21] ''இலக்கிய பாரம்பரியம்'' என்ற மூன்று பெரும் நூல்களைத் தொடர்ந்து எழுதும் பழக்கத்தைத் தோற்றுவித்தார். மேற்கூறிய மூன்று நூல்களும் சித்தர்களால் அறிவுலகுக்குக் கொடுக்கப்பட்ட பரிசு அல்லது அரியசாதனையாகும்[22]. இவர் இப்படி மூன்று பெரும் துறை சார்ந்த இலக்கியங்களை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் உருவாக்கியதோடு, ஏறத்தாழ எல்லாக் கலைகளையும், அறிவியல்களையும் பற்றி எல்லா நூல்களையும் எழுதியுள்ளார். இவரது முயற்சிகள் இவருக்கு முன்பு பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய அமராவதியாற்றங்கரைக் கருவூரூரின் வாழ்வை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டதாகவே தெரிகிறது. இருந்தபோதிலும், அமராவதியாற்றங்கரைக் கருவூரூரின் சமுதாய மாற்றக்கொள்கையால், அரசியல் துரோகங்களையும், விரோதங்களையும், எதிர்ப்புகளையும், பகைகளையும், சூழ்ச்சிகளையும், அதிரடித்தாக்குதல்களையும் ... சமாளிக்கவே முடியாத மிகமிக மென்மையான, பண்பட்ட, நாகரீக நாடாகத் தான் தமிழ்நாடு உருவாயிற்று என்ற பேருண்மை இவரை எரிமலையெனக் குமுறச் செய்தது. எனவே, பூசை மணியையும், கற்பூரத் தட்டையும் ஏந்திய இவரது கைகள் போர் வாளும், வேலும், வில்லும் ஏந்தின. தவத்திலும், பூசையிலும் பழகிய இவர் தன்னை யானை ஏற்றம், குதிரையேற்றம், தேரோட்டுதல், மல்யுத்தம், படகு விடுதல், படை நடத்துதல் முதலிய கலைகளுக்கு உரியதாகப் பழக்கிக் கொண்டார். ஆழ்தவத்தில் அசைவற்றிருக்கும் விரல்களால் ஏட்டையும், எழுத்தாணியையும் எடுத்து இரவு பகலாக எண்ணற்ற நூல்களை எழுதிக் குவித்தார். துறவு மேற்கொண்ட இவர் மானுட இன நலனுக்காக உறவு மேற்

21. History of Language and Literature.
22. These three are the greatest contributions to the world of knowledge by the Siddhars.



கொண்டு நெடுங்காலம் வாழ்ந்து, வாழையடி வாழையென கருவூர்த்தேவரை உருவாக்கினர்.

இமயம் முதல் குமரி வரை இருந்த தமிழின மக்கள் சமுதாயம்[23] பல்வேறு வகையான சாதி, சமய பிரிவுகளால் வேற்றுமைகளையும், வேறுபாடுகளையும், மாறுபாடுகளையும் ஏற்ற இறக்கங்களையும், வெறுப்புகளையும், மறுப்புகளையும் போட்டி பொறாமைகளையும், சண்டை சச்சரவுகளையும் பெற்று, எழுச்சி பெறமுடியாத வீழ்ச்சிகளையும், உயர்ச்சி பெறமுடியாத தாழ்ச்சிகளையும் பெற்றதைக் கண்டு அதன் மீட்சிக்காகத் திட்டமிட்டுச் செயலாற்றப் புறப்பட்ட மாவீரரே காவிரியாற்றங்கரைக் கருவூரூர். இவர் தமிழ்ச் சமுதாயத்தைத் தொடர்ந்து சூழ்ச்சியால் வீழ்ச்சி நிலையில் வைத்திருக்கும் பேராற்றல் மிக்கவர்களை எதிர்த்துப் போராடுவதற்காக சமய மறுமலர்ச்சியை[24] உருவாக்கினர். அதற்காக கி. பி. 785-லேயே, மிகப் பெரிய முயற்சிகளைச் செய்து பொதிகை மலையில் இருந்து ''சத்தி இலிங்கம்'', ''சிவ இலிங்கம்'' என்ற இரண்டையும் மிகமிகப் பெரிய தொடர் முயற்சியால் நெடுந்தொலைவு எடுத்துவந்து முறையே தஞ்சாவூரிலும், கங்கை கொண்ட சோழபுரத்திலும் நிறுவினர். இவற்றிற்குரிய கோவில்களை இருநூறு ஆண்டுகள் கழித்தே, தான் உருவாக்கிய பிற்காலச் சோழப் பேரரசின் புகழ்மிக்க மாமன்னர்களைக் கொண்டு கட்டினர். இவர் மிகச் சிறந்த சிற்பி என்பதால் எண்ணற்ற கற்சிற்பங்களைச் செதுக்கியும் உலோகச் சிற்பங்களை வார்த்தும் பல அருள் வழங்கு நிலையங்களைக் கட்டினர்.[25] அக்கோயில்களைச் சாதனமாகக் கொண்டு,

23. The Tamils or The Indians — The Tamils are the aboriginates of the India.
24. The Religious Renaissance.
25. இவர் பற்றிய செய்திகள், இவர் வரலாற்று நூலில் தெளிவாக உள்ளன.

ஆங்காங்கே கிடைத்த அருட்தன்மையுடைய மனிதர்களைத் தேர்ந்தெடுத்து முறையான பயிற்சியின் மூலம் அவர்களை அருளாளர்களாக ஆக்கினர். அப்படி உருவான அருளாளர்களைக் கொண்டே சமய, சமுதாய இருள்களை அகற்றினர். இதனால், பிற்காலச் சோழப் பேரரசு எனும் ''தெய்வீகப் பேரரசை[26]'' உருவாக்கும் பெரும்படையினை அருட்படையாகத் திரட்டினர். அவரது முயற்சி நானூறு ஆண்டு காலம் வரலாற்றில் நின்றது. ஆனால் அவரை இன்றுகூட உணர்பவர் யாரும் இல்லை. இருப்பினும் அவர், தான் கட்டிய தஞ்சைக் கோபுரத்தின் மடியிலேயே சிலைவடிவில் நிலைத்து நிற்கிறார். கடலலைகள் ஓய்ந்தாலும் கன்னித் தமிழினத்தைக் காக்க இவர் எடுத்த முயற்சிப் பேரலைகள் என்றைக்குமே ஓயமாட்டாதவை. இவர் உருவாக்கிய அருள் வழங்கு நிலையங்கள் விலைமதிக்க முடியாத கலைக் கருவூலங்களாக மலையென நிமிர்ந்து நிற்கின்றன. இப்பேருண்மைகளை எல்லாம் உலகுக்கு அறிவிக்க முடியவில்லை என்ற ஏக்கத்தால் அலைகடல் துரும்பென அலைபவரே இன்றைய 'ஞாலகுரு', குருமகா சன்னிதானம் சித்தர் கருவூரார், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி.

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னரே வாழையடி வாழையென சித்தர் கருவூரார் வழியில் வந்த சித்தர் ஏனம்பட்டியார், ''தமிழகத்தையோ, இந்தியத் துணைக் கண்டத்தையோ, வளப்படுத்தி வளர்க்கும் குறுகிய நோக்கில் பிறந்ததல்ல சித்தர் நெறி'' என்ற பேருண்மையினை உலகுக்கு அறிவிக்க ''இந்து மறுமலர்ச்சி இயக்கம்'' உருவாக்கினர். அவர் இந்துமதம் என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் ''இந்து'' என்ற சொல்லையே பயன் படுத்தினர். இதற்குரிய காரணகாரிய கருத்து விளக்கத்தை மிகத் தெளிவாக ஏட்டிலும், நாட்டிலும் நிலைநாட்டிச்

26. The Divine Kingdom; The Kingdom to Safeguard the Siddharism [Induism].



சென்றுள்ளார். அவர் மத வெறியின்றி சித்தர்களின் சாதனைகளை சமுதாய நெறியாக மாற்றுவதற்காகவே பெரும்பாடுபட்டிட்டார். எனவே தான், மடங்களையோ, தனித்த கூட்டங்களையோ, அருளார்ந்த நிலையங்களையோ உருவாக்காமல் அருளுலக வாரிசுகளை உருவாக்கும் தத்துவ வித்துக்களைச் சாதி, சமய, இன, மொழி, நாடு கடந்து எங்கும் விதைத்துச் சென்றிட்டார். அவை எங்கும் சோலையாக இருப்பதால், அவற்றின் ஊடே சாலை அமைத்துச் செயல்படப் புறப்பட்டிருக்கிறார், 'ஞாலகுரு', 'ஞானகுரு', அரசயோகி, ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி, இராசிவட்ட நிறைவுடையார், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம். சித்தர் கருவூரார் (டாக்டர்) ப.கிருட்டிண மூர்த்தி, எம். ஏ., (பிஎச். டி.). இவர் இன்றைய உலகியலுக்கு ஏற்ப 'இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை' வெளிப்படையாக 'ஒரு பண்பாட்டு இயக்கம்[27]', 'ஒரு தெய்வீகக் கழகம்[28]', 'அருளாளர்களின் குழு[29]', 'உலகச் சமாதான இயக்கம்[30]', உலகத் தத்துவப் பேரவை[31]', 'உலகச் சித்தாந்திகளின் மையம்[32]', ... என்று அறிவித்து மானுட இன நல உரிமைக்காகப்[33] பணியாற்றப் புறப்பட்டிருக்கிறார். எனவே இந்த இயக்கத்துக்கு யாருமே எவ்விதச் சாதி, சமய மொழி, இன, நாட்டுச் சாயம் பூச முற்படவே கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது! இந்த இயக்கம் உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டுக்காகப் பாடுபடக்கூடிய ஓர் ஒப்புயர்வற்ற தனித்த இயக்கம். அதாவது,

27. A Cultural Organization.
28. A Divine Society.
29. The Board of mystics.
30. The UniversalPeace Making movement.
31: The International Philosophical Association.
32. The Centre of the International Theologists.
33. The welfare of the human community rights.

இந்த இயக்கம் உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை உருவாக்குவதற்குரிய முயற்சிகளைக் கருவாக்கிக் கொண்டதேயாகும். இது தன்னுடைய கொள்கைகளையும், குறிக்கோளையும், அன்பு வழியில், அற வழியில், அருள் வழியில், அமைதி வழியில், சமாதான முறையில் நிறைவேற்றுவதிலேயே முழுமையான நம்பிக்கை கொண்டுள்ளது. இந்த நம்பிக்கையே என்றென்றும் இந்த இயக்கத்தின் சட்டமாகவும், திட்டமாகவும் இருந்திடும். எனவேதான், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்கள் எவ்விதமான ஆரவாரமும் இன்றி, இந்தியத் துணைக்கண்டத்துள்ளும், அயல் நாடுகளிலும் நிறுவனக் கட்டமைப்புகளைக் கட்டி வருகின்றார். இவை அருளாளர்களின் பெயரிலும், கலைகளின் பெயரிலும், அறிவியல்களின் பெயரிலும், நற்பணிகளின் பெயரிலும் வடிவமைப்புப் பெற்று வருகின்றன. இவை பேரருளின் திருவருள் திறத்தால் நிர்வாக ஒழுங்கமைப்பைப் பெற்று வளர்ந்தோங்கும் நன்னாளில் உலகம் தழுவித் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு, முதலிய அனைத்திலும் பற்று, பாசம், அன்பு, தோழமை, நட்பு, அமைதி, நிம்மதி, நிறைவு, ஒற்றுமை, சமாதானம் ...... முதலிய இனிய பண்புகள் அனைத்தும் கனிந்து சுவை தரும் நற்காலம் தோன்றும். அக்காலத்தை விரைவில் உருவாக்குவதற்காகவே உழைக்க அனைவரையும் அழைக்கிறோம். அதாவது உலக மானுட நலம் செழித்தோங்க உழைக்க அனைவரையும் அழைக்கிறோம்.

உணர்க! உணர்த்துக!
வருக! ஆதரவு தருக!

—இங்ஙனம்,

**இந்து மறுமலர்ச்சி இயக்கத்தவர்,**
**விருப்பாளர், ஆர்வலர், ஆதரவாளர்.**



ஓம் திருச்சிற்றம்பலம்

தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

## குருதேவர் சொல்ல இவ்வெளியீட்டை எழுதியவர்கள்:

1. அருள்மிகு அகிலாண்டேசுவரி சன்னிதானம், நீர்காத்த லிங்கம் ஆதீனம், ஞானத்தரு, அருள்மழை, ஞானக்காட்சி வழங்கு நாயகம், அருளாட்சி ஓலைநாயகம், சித்தர் நெறிக்குரவர்
சித்தரடியான் கு. சத்திவேலு, B.E.,
51-E, நாடார்காலனி, கீழவாசல், தஞ்சாவூர்.
[பக் 1-6; 27-7-'82]

2. அருள்மிகு ஆலவாய் கொற்றவை சன்னிதானம், அங்கயற்கண்ணி கோயில்வாழ் சுந்தரானந்தர் ஆதீனம், வண்டியூர் மாரியம்மன் பீடாதிபதி, உக்கிரப்படை கொண்டருளுதேவர் சொக்கேசர் ஆதீனம், வைகையாற்றங் கரை அருட்சேனைத்தளபதி, அருட்பணி இரட்டையர், சித்தரடியான்,
இரா. தனசேகரன், 6, பொன்னகரம், 4வது குறுக்குத்தெரு, மதுரை-10.

## தொடர்பு கொள்க!

1. ஞாலகுரு, ஞானகுரு,
பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,
குருமகாசன்னிதானம் சித்தர் கருவூரார்,
(Dr.). **ப. கிருட்டிணமூர்த்தி** M.A., [Ph. D]
15, சண்முகம் தெரு, வரதராசபுரம், அம்பத்தூர்,
சென்னை — 600 053.

2. **தலைமைச் செயலகம்**

அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம்,
திரு. நெ. சேவுகன் அவர்கள்
C/o, **கரதி வத்திராலயம்,** G. R. N. S.,
கொட்டாம்பட்டி (அஞ்), மேலூர் (TK), மதுரை மாவட்டம்,
Pin 625 103

3. **அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம், ஞானமுத்து**

சித்தரடியான், பெரி. முத்தையா,
20, மோதிலால் 2-வது தெரு, ஆரப்பாளையம் குறுக்கு சாலை,
மதுரை - 625 010.

4. **ஆலவாய் கொற்றவை சன்னிதானம்,**

வைகைக்கரை அருட்சேனைத்தளபதி,
சித்தரடியான் இரா. தனசேகரன், (B. A.).,
6, பொன்னகரம் 4-வது குறுக்குத்தெரு,
மதுரை - 625 010.

5. **"அருவுருவ மூகாம்பிகை ஆலயம்"**

எருமை நாட்டு வெல்போர்க் கொற்றவை சன்னிதானம்,
சித்தரடியான் அ. கு. ரா செகனுதன்,
1/5, பழைய தெரு, வேம்படி தாளம், சேலம்-637 504.

6. **அருள்மிகு புன்னை நல்லூர் மாரியம்மன் சன்னிதானம்,**

சித்தரடியான் புலவர் பெ. வைத்தியலிங்கம்,
இரா. இரா. முத்திரைக்கோட்டை (அஞ்),
மாரியம்மன் கோயில் (வழி)
தஞ்சை மாவட்டம்-613 501.

7. **காவிரியற்றங்கரை அருட்சேனைத் தளபதிகள்**

சித்தரடியான்கள் S. கோபிநாத், S. பிரேம்ஆனந்,
B-11 R.K. நகர், கல்லுக்குழி, திருச்சி-620 020.